## கரூர் மாநகராட்சி

**2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் சாதாரணக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

### பொருள்கள்

**1.**அரசாணை (நிலை) எண்.313, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5(2)) துறை, நாள்.06.10.2025ல் மாநகராட்சிகளில் உள்ள குடியிருப்புகள் தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள், இன்னபிறவை மற்றும் வருவாய் கிராமங்களின் பெயர்களில் உள்ள சாதிப்பெயர்களை நீக்குதல் / மறு பெயரிடுவதற்கு அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் செயல்முறைபடுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன்படி அரசாணையின்படி கரூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள தெருக்கள் மற்றும் கட்டிடத்தில் உள்ள சாதிப்பெயர்களை மறு பெயரிடுவதற்கு மாநகராட்சியால் ஏரியா சபா கூட்டம் நடத்தப்பட்டு பொதுமக்களுடன் கலந்துரையாடல் செய்து ஆட்சேபனை உள்ள தெருக்கள் மற்றும் கட்டிடம் மறு பெயர் தேர்வு செய்யப்பட்டு மறு பெயரிடுவதற்கு பட்டியலினை வழிகாட்டு நெறிமுறைகளின்படி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் கரூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் வாயிலாக அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு துணைப்பணி மேலாளர், அரசு கிளை அச்சகம், திருச்சி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து மேற்படி பட்டியலினை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு A4 அளவு பக்கம் ஒன்றுக்கு ரூ.3000/— வீதம் (மூன்று பக்கங்கள்) ரூ.9000/— உரிய தலைப்பில் செலுத்தி அசல் செலுத்து சலாணை அனுப்பிவைக்குமாறு துணைப்பணி மேலாளர், அரசு கிளை அச்சகம், திருச்சி அவர்களின் கடித ந.க.எண்.திட்டம் 38/142பி/2025, நாள்.05.12.2025ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி ரூ.9000/—ஐ மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்த மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மாமன்றம் அனுமதிக்கலாம். **(6571/2025/எப்1)**

**தீர்மான எண்.2879** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**2.**கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பழுதடைந்த மாணவர் தங்கும் விடுதி அமைந்திருந்த இடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய நீச்சல் குளம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. மிக விரைவில் முடிக்கப்பட்டு சிறுவர் சிறுமியர், மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது. மேற்படி நீச்சல் குளத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும், பாதுகாப்பு பணிகளுக்கும் கீழ்கண்ட பணியாளர்கள் மிகவும் அவசியமாக தேவைப்படுகிறார்கள்.

1. நீச்சல் குள மேலாளர் (Pool Manager) – 1 நபர்
2. உயிர் காப்பாளர்கள் (Life guards) – 4 நபர்கள்
3. பயிற்சியாளர்கள் (Trainers)–(ஆண்–1, பெண்–1) – 2 நபர்கள்
4. காவலர் (Security guard) – 3 நபர்கள்
5. Electrician cum pump operator - 3 நபர்கள்
6. Sanitary workers - 2 நபர்கள்

மேற்படி 15 TEXCO பணியாளர்களை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலம் நியமித்துக் கொள்ளவும், அதற்கான மொத்த செலவினத்திற்கும், அரசால் அவ்வப்போது உயர்வு செய்யப்படும் ஊதியம் மற்றும் அகவிலைப்படியினை வழங்கும்பொழுது ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/5708/2024)**

**தீர்மான எண்.2880** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.டிஎம்ஏ/1066/2025–எம்சிஏ–3 நாள்.30.12.2025ல் சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலன்கருதி கிறிஸ்துவர்களுக்கான கல்லறை தோட்டம், இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்களுக்கு கீழ்கண்ட இரண்டு இடங்களில் உட்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை 2025–26ம் நிதியாண்டின் பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| S.No | Name of work | Estimate amount (in lakhs) |
|---|---|---|
| 1 | Construction of Compound wall and Basic amenities for burial ground at zone 1 ward 11 Bhalamalpuram – Kallarai Thottam | 4.85 |
| 2 | Construction of Compound wall and Basic amenities for burial ground at zone 1 ward 11 Bhalamalpuram - Kabarsthan | 4.80 |

எனவே, மேற்கண்ட இரண்டு இடங்களில் உள்ள கல்லறை தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களுக்கு உட்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.65 இலட்சத்தினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:
1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/6632/2025)**

**தீர்மான எண்.2881** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

4.கரூர் மாநகராட்சி மண்டலம் 4, வார்டு எண்.36, 37, 43, 44, 45, 46, 47 மற்றும் 48 ஆகிய வார்டு பகுதிகளில் குடிநீர் அல்லாத பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ஆழ்துளை கிணறுகள் 237 எண்ணிக்கை பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட ஆழ்துளை கிணறுகளின் மினிபவர் பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவது அவசியமாகிறது. எனவே மண்டலம்–4 மேற்கண்ட மினிபவர் பம்புகளை பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.38.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:
1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை ரூ.38.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/7416/2025)**

**தீர்மான எண்.2882** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

5.கரூர் மாநகராட்சி மண்டலம் 1, வார்டு எண்.1 முதல் 11 மற்றும் 28 ஆகிய வார்டு பகுதிகளில் உள்ள 168 ஆழ்குழாய் கிணற்றின் மூலம் பொதுமக்களுக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட 168 ஆழ்குழாய்களிலும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள், மின் மோட்டார் காயில் பழுது சின்டெக்ஸ் டேங்க் பழுது, பகிர்மானக்குழாய் பழுது, கேபிள் மற்றும் பேனல்போர்டு பழுது மற்றும்

இதர பணிகளையும் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.38.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை ரூ.38.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

3.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/7418/2025)**

**தீர்மான எண்.2883** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**6.**கரூர் மாநகராட்சி மண்டலம்–3ல் உள்ள சுப்பிரமணிய நகர் மற்றும் ரமணா கார்டன் பகுதியில் உள்ள சாலை மண் சாலையாக உள்ளதனை தார் சாலையாக மாற்றித்தருமாறு அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். அதன்படி மேற்படி பகுதியில் தார்சாலை அமைப்பதற்கான விபரத்தினை வழங்கக்கோரி நகரமைப்பு பிரிவு அவர்களிடம் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு குறிப்பு வழங்கியுள்ளார்.

அ. கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–3 தாந்தோணி கிராமம் சர்வே எண்.408/1, 410/1ல் அமைந்துள்ள சுப்பரமணியம் நகர் அனுமதிப்பெறாத மனைப்பிரிவில் உள்ள விற்பனை செய்யப்பட்ட மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கான (Sold plot frame work) வடிவமைப்பு வரைபடம் நகர் உரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களால் S.P.F.W.No.173 என்ற எண்ணில் வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. (சாலையின் விபரம் பின்வருமாறு)

<u>சுப்பிரமணிய நகர் (SF No.173) உள்ள சாலைகளின் விபரம்</u>

| | | |
|---|---|---|
| 1 | சுப்பிரமணிய நகர் மெயின் ரோடு 1 வடக்கு தெற்கு | 178.00 x 12.00M |
| 2 | சுப்பிரமணிய நகர் மெயின் ரோடு 2 வடக்கு தெற்கு | 165.00 x 12.00M |
| 3 | சுப்பிரமணிய நகர் 1வது கிராஸ் மேற்கு – கிழக்கு | 122.00 x 9.00M |
| 4 | சுப்பிரமணிய நகர் 2வது கிராஸ் மேற்கு – கிழக்கு | 122.00 x 9.00M |
| 5 | சுப்பிரமணிய நகர் 3வது கிராஸ் மேற்கு – கிழக்கு | 122.00 x 9.00M |
| 6 | சுப்பிரமணிய நகர் 4வது கிராஸ் மேற்கு – கிழக்கு | 167.00 x 12.00M |
| 7 | சுப்பிரமணிய நகர் 5வது கிராஸ் மேற்கு – கிழக்கு | 114.00 x 9.00M |
| 8 | சுப்பிரமணிய நகர் 1வது கிராஸ் வடக்கு – தெற்கு | 55.00 x 9.00M |
| 9 | சுப்பிரமணிய நகர் 2வது கிராஸ் வடக்கு – தெற்கு | 36.00 x 9.00M |
| 10 | சுப்பிரமணிய நகர் 3வது கிராஸ் வடக்கு – தெற்கு | 95.00 x 12.00M |

ஆ. கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–3 தான்தோணி கிராமம் சர்வே எண்.428/பகுதி, 430/பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ ரமணா கார்டன் அனுமதிப்பெறாத மனைப்பிரிவில் உள்ள விற்பனை செய்யப்பட்ட மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கான (Sold plot frame work) வடிவமைப்பு வரைபடம் நகர் உரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களால் S.P.F.W.No.1881 என்ற எண்ணில் வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. (சாலையின் விபரம் பின்வருமாறு)

<u>ரமணா கார்டன் (SF No.1881) உள்ள சாலைகளின் விபரம்</u>

| | | |
|---|---|---|
| 1 | ரமணா கார்டன் 1வது மெயின் ரோடு வடக்கு தெற்கு | 146.00 x 9.00M |
| 2 | ரமணா கார்டன் 2வது கிராஸ் மெயின் ரோடு வடக்கு தெற்கு | 243.00 x 9.00M |
| 3 | ரமணா கார்டன் 3வது மெயின் ரோடு வடக்கு தெற்கு | 191.50 x 6.00M |
| 4 | ரமணா கார்டன் 1வது கிராஸ் மேற்கு – கிழக்கு | 149.00 x 9.00M |
| 5 | ரமணா கார்டன் 2வது கிராஸ் மேற்கு – கிழக்கு | 136.00 x 9.00M |
| 6 | ரமணா கார்டன் 3வது கிராஸ் மேற்கு – கிழக்கு | 298.00 x 9.00M |

| | | |
|---|---|---|
| 7 | ரமணா கார்டன் 4வது கிராஸ் மேற்கு – கிழக்கு | 282.00 x 9.00M |
| 8 | ரமணா கார்டன் 5வது கிராஸ் மேற்கு – கிழக்கு | 265.00 x 9.00M |

எனவே, மேற்படி பகுதியில் உள்ள சாலைகள் மாநகராட்சி சாலைப்பதிவேட்டில் UNICODE இல்லாத காரணத்தினால் இம்மாநகராட்சியின் சாலைப்பதிவேட்டில் UNICODE பதிவு செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/8232/2025)**

**தீர்மான எண்.2884** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

7.கரூர் மாநகராட்சி பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதிதாக கட்டப்பட்ட நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினை பராமரித்துக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.27968/2022/பி1 நாள்.15.11.2023 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.3657/2023/பி1 நாள்.11.01.2024ல் வெளிக்கொணர்வு முகமைகள் மூலம் நிரப்புதல் பணியினை 36 மாதங்கள் (Initailay for a period of 12 months and extendable for continous period of 36 months) ஸ்ரீ கார்த்திக் இன்டஸ்ட்டிரியஸ், சேலம் என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டு, அந்நிறுவனத்தின் மூலம் திருமதி.என்.சுகந்தி என்பவரை ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்தி அன்னார்க்கு மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/– மற்றும் EPF – 13%, ESI-3.25%, Service charge-0.09%, Service Tax – 18%ம் சேர்த்து வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து மேற்படி நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினை பராமரித்துக்கொள்ளும் பணியாளர்க்கு மாதம் ஊதியம் வழங்க உத்தேச செலவினமாக ரூ.4.00 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மானம் எண்.1916 நாள்.08.08.2024ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.3657/2023/பி1 நாள்.07.10.2025ல் மேலும் ஒரு வருட காலத்திற்கு (11.01.2025 முதல் 10.01.2026 வரை) நீடித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

எனவே கரூர் மாநகராட்சி பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் புதிதாக கட்டப்பட்ட நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினை பராமரித்துக்கொள்ளும் பணியாளருக்கு ஒவ்வொரு மாதம் ஊதியம் வழங்குவதற்கு உத்தேச செலவினமாக ரூ.2.75 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/2746/2025)**

**தீர்மான எண்.2885** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**8.**கரூர் மாநகராட்சி மண்டலம் **–2** வார்டு எண்.**21** காமராஜ் சந்தையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தில் ரூ.**675.80** இலட்சம் மதிப்பில் புதிதாக காய்கறி அங்காடி கட்டும் பணிகள் முடிவடைந்த நிலையில், மேற்படி கட்டடத்தின் மொத்த பரப்பளவு– **4153.40** சதுரமீட்டர் (அல்லது) **44691** சதுரடியாக உள்ளது. தற்போது காய்கறி கடைகள்அளவில் கீழ்கண்ட விபரப்படி உள்ளது. (TS.No.671/1, 671/2)

| **வ.எண்** | **கடைகள்எண்கள்Stalls asper** | **மொத்தம்** | **சதுரமீட்டர்** | **சதுரஅடி** | **தினசரிநிர்ணயம் செய்யப்படவுள்ளவாடகை கடை 1க்குரூ** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| 1 | 1–31 | 31 | 3.00X2.40 | 77.47 | 75 |
| 2 | 32–79, 113–136 | 72 | 2.40X2.30 | 59.40 | 60 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 97 | 1 | 4.55X2.85 | 139.53 | 100 |
| 4 | 80–96, 107–112 | 23 | 3.20X2.30 | 79.19 | 75 |
| 5 | 98–105 | 8 | 4.60X2.55 | 126.21 | 100 |
| 6 | 106 | 1 | 4.60X3.40 | 168.29 | 125 |
| மொத்தம் | | 136 | | | |
| **மளிகை கடைகள்** | | | | | |
| வ.எண் | கடைகள்எண்கள் | மொத்தம் | சதுர மீட்டர் | சதுரஅடி | தினசரி நிர்ணயம் செய்யப்படவுள்ள வாடகை கடை 1க்கு ரூ |
| **1** | **1–26** | **26 கடைகள்** | 3.00X3.00 | **96.84** | 150 |

அரசாணை நிலை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை. நாள்.03.07.2007ன்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அசையா சொத்துக்கள் முதல் தடைவையாக குத்தகைக்கு விடும்பொழுது பொது ஏலத்தின் மூலமாக குத்தகைக்கு விடப்படவேண்டும். மேலும் வரியில்லா இனங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள குத்தகை இனங்களின் குத்தகை உரிமம் வழங்குவது மூலமாக நிதி ஆதாரத்தினை பெருக்குவது சரியானமுறையாகும். ஏனெனில் குத்தகை உரிமம் என்பது தேவை மற்றும் வெளிப்படைத்தன்மையின் காரணமாக எவருக்கும் பாதிப்பில்லாமல் வருவாயினை பெருக்கும் ஒருசிறந்த முறையாகும்.

எனவே மாநகராட்சி நிர்வாகத்தினை செம்மையாக நடத்திடவும் சிறப்பாக நிர்வாகத்தினை கொண்டு செல்வதற்கும் குத்தகையின உரிமங்களின் மூலம் சரியான, நியாயமான வருவாயினை ஈட்டும் பொருட்டு, மேற்கண்டவாறு கடைகளுக்கு தினசரி வாடகை நிர்ணயம் செய்து வசூல் செய்ய மாமன்றஅனுமதிகோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மாமன்றம் அனுமதிக்கலாம் **(அ6/7763/2020)**

**தீர்மான எண்.2886** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**9.**தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் **1998** மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்விதிகள் **2023**ல் பிரிவு **256(3)**ல் சொத்துவரி பெயர்மாற்ற கட்டணம் தொடர்பான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு அறிவிக்கை எண்.**836**, நாள்.**16.12.2025**ல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் குடிநீர் கட்டண விதிப்பு எண்களுக்கு பெயர்மாற்றக் கட்டணம் எக்காரணம் கொண்டும் வசூலித்தல் கூடாது. சொத்துவரி பெயர்மாற்றம் செய்யப்படும் பொழுது சம்மந்தப்பட்ட சொத்துவரி விதிப்பு எண்களுக்குரிய குடிநீர் கட்டணம் மற்றும் பாதாளசாக்கடை கட்டணம் இணைப்பு எண்களையும் உரிய உரிமையாளரின் பெயருக்கு அதே விண்ணப்பத்தின் அடிப்படையில் உடன் பெயர்மாற்றம் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திருத்தத்தில் சொத்துவரி பெயர்மாற்ற கட்டணமாக கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

குடியிருப்பு பயன்பாடு ஒரு எண்ணிற்கு– ரூ.**500/–**

குடியிருப்பு பயன்பாடு தவிர்த்து பிற பயன்பாட்டிற்கு ஒரு எண்ணிற்கு –ரூ.**1000/–**

மேற்படி சிறப்பு அறிவிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் . **(அ1/2384/2022)**

**தீர்மான எண்.2887** பதிவு செய்யப்பட்டது

**10.**கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான பிரம்மதீர்த்தம் சாலையில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையம் (Multiutility Hall) கட்டிடத்திற்கு கரூர் நகர்மன்ற தீர்மான எண்.10, நாள்.25.01.2022ல் குறைந்தபட்ச மாத வாடகை 50000/– மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி18% என நிர்ணயம் செய்து, ஒப்படைக்கும் நாள் முதல் 1 1/2 ஆண்டுகள்அல்லது மூன்று ஆண்டுகளில் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என அனுமதி பெற்றும்,அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.25857/2021/எம்.சி.பி2, நாள்.22.02.2022ன்படி, 01.03.2022 முதல் அனுமதி வழங்கப்பட்டும், அரசு வேளாண்மை கல்லூரி செயல்பட்டு வருகிறது. மேற்படி கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளஅனுமதிகாலம் 31.03.2026 உடன் முடிவடைகிறது.

இந்நிலையில் முதல்வர், தமிழ்நாடு அரசு வேளாண்மை கல்லூரி அவர்களின்R2/14802/20-21, நாள்.29.12.2025ல் மேலும் ஓராண்டு காலத்திற்கு மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தினை அரசு வேளாண்மை கல்லூரி வாடகைஅடிப்படையில் செயல்பட கால நீட்டிப்பு செய்து தரக்கோரியுள்ளார்.

அரசாணைநிலை எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.06.08.2024ல் 9 ஆண்டு குத்தகை இனங்களில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை தொகை15%உயர்வு செய்வதற்கு பதிலாக ஒவ்வொரு ஆண்டும் சீராக 5% உயர்வு செய்து குத்தகை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என உள்ளது.

எனவே, மேலும் ஒரு ஆண்டுகாலம் 01.04.2026 முதல் 31.03.2027 வரை அரசு வேளாண்மைக ல்லூரிக்கு வாடகை அடிப்படையில் 5% உயர்வு செய்து அனுமதி வழங்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

மாமன்றம் அனுமதிக்கலாம். **(9730/2021/அ6)**

**தீர்மான எண்.2888** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**11.** தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ல் மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு, கட்டடங்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை வசூல் செய்யப்படும் புதுப்பித்தல் கட்டணம் குறித்து திருத்தம் செய்து தமிழ்நாடு மாநில அரசிதழில் எண்.836 நாள்.16.12.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி திருத்தத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்தல் கட்டணம் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | 100 சதுரடி வரையிலான கட்டிடங்களுக்கு | ரூ.2500/– |
| 2 | 101 முதல் 500 சதுரடி வரையிலானகட்டிடங்களுக்கு | ரூ.5000/– |
| 3 | 501 முதல் 1000 சதுரடி வரையிலான கட்டிடங்களுக்கு | ரூ.7500/– |
| 4 | 1001 சதுரடிக்கு மேலான கட்டிடங்களுக்கு | ரூ.10000/– |

மேற்படிஅரசிதழ் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(அ6/6147/2024)**

**தீர்மான எண்.2889** பதிவு செய்யப்பட்டது

**12** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட நெரூர் தலைமை நீரேற்று நிலையம், கட்டளை தலைமை நீரேற்று நிலையம், அரசுகாலனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பாலம்மாள்புரம் கழிவுநீர் நீரேற்று நிலையம் ஆகிய நான்கு உயர்அழுத்த (HT) மின் இணைப்புகளுக்கு மாதந்தோறும் செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணம் மற்றும் இம்மாநகராட்சி பகுதியில் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை 2024–2025 மற்றும் 2025 – 2026 ஆம் நிதியாண்டுகளில் குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் குறைவாக உள்ளபோது பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசர அவசியம் கருதி வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருப்பில் உள்ள தொகையிலிருந்து குடிநீர் (ம) வடிகால் நிதிக்கு நிதி மாற்றம் செய்து வழங்கியதற்கு பின்னேற்பு

மற்றும் எதிர்வரும் காலங்களில் தொகை இருப்பு குறைவாக உள்ளபோது உரிய தலைப்பின் கீழ் நிதி மாற்றம் செய்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மாமன்றம் அனுமதிக்கலாம் **(பி1/1749/2025)**

**தீர்மான எண்.2890** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**13.**உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கரூர் அவர்களின் கடித இ.வி.எண்.PUKIICZR/2025, நாள்.**08.01.2026**–ல் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட, இனாம் கரூர் கிராமம், சர்வே எண்.**473/1A**ல் **0.64.00** ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலத்தை அரசால் ஒப்புதல் வழங்கப்பட்ட கரூர் மறு ஆய்வு முழுமைத்திட்டத்தில் உள்ள விவசாய உபயோகப்பகுதியிலிருந்து (Agriculture Use Zone) வணிக உபயோகப்பகுதியாக (Commercial Use Zone) நிலப்பயன் மாற்றம் செய்திட பொதுமக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை பெறும் பொருட்டு அறிக்கையினை கரூர் உள்ளூர் தினசரி நாளிதழ்களில் தமிழ் அறிக்கையினை தமிழ் நாளிதழிலும் மற்றும் ஆங்கில அறிக்கையினை ஆங்கில நாளிதழிலும் விளம்பரம் செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி அறிக்கையினை கரூர் உள்ளூர் தினசரி நாளிதழ்களில் தமிழ் அறிக்கையினை தமிழ் நாளிதழிலும் மற்றும் ஆங்கில அறிக்கையினை ஆங்கில நாளிதழிலும் விளம்பரம் செய்திட ஆகும் செலவினங்களை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம். **(6052/2024/எப்1)**

**தீர்மான எண்.2891** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**14.** கரூர் மாநகராட்சியில் **2023– 2024 –ம்** ஆண்டிற்கு வருவாய் மற்றும் மூலதன நிதி குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி ஆகிய மூன்று தலைப்புகளும் **01.10.2023** முதல் **31.3.2024** முடிய இரண்டாம் அரையாண்டுக்கான கணக்குகள் முடிக்க கீழ்க்கண்டுள்ள விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1) பி. தமிழரசு, ஸ்ரீ மோனிஷா கம்ப்யூட்டர்ஸ் ரூ. **98000/–**
   **81**, Penna Tulip Thindal , Erode 638012
2) D. Rajasekar. Account Consultant ரூ.**108000/–**
   **23**, TCR Complex. Bangalore road.
   Krishna giri 635 001
3). Lakshaya Infotech. 11. Sri Ram Sports Complex
   GLOBI Pillayar Koil Street Thruvannamalai ரூ.**116000/–**

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

**1.** மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி. தமிழரசு , ஸ்ரீ மோனிஷா கம்ப்யூட்டர்ஸ் ரூ. **98,000/–** விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**2.** மேற்படி பணியின் அவசர அவசியம் ருதி மாமன்ற அனுமதியை எதிர் நோக்கி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் **3.1.2024**ஆம் தேதி முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**3.**மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.**98,000/–** மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(பி2/3715/2023)**

**தீர்மான எண்.2892** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**15.** கரூர் மாநகராட்சி பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு 2025–2026ம் ஆண்டு வரவு செலவு திட்ட நிதியில் கீழ்கண்ட கணக்கு குறியீட்டில் தொகை குறைவாக உள்ள விபரம் பின்வருமாறு.

வருவாய் நிதி

| வ.எண் | கணக்கு குறியீட்டு எண் | கணக்கு தலைப்பு | 2025–2026 வரவு செலவு மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2501001 | தேர்தல் செலவுகள் (பொறியியல் பிரிவு) | 100.00 |
| 2 | 2305005 | மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் பராமரிப்பு பணிகள் | 100.00 |
| 3 | 2305001 | தார்சாலை, நடைபாதை மராமத்து பராமரிப்பு பணிகள் | 100.00 |
| 4 | 2305202 | கட்டிட பராமரிப்பு பணிகள் | 50.00 |

குடிநீர் மற்றும் வடிகால் நிதி

| வ.எண் | கணக்கு குறியீட்டு எண் | கணக்கு தலைப்பு | 2025–2026 வரவு செலவு மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2305010 | புதைவடிகால் பராமரிப்பு பணிகள் | 100.00 |

மேற்காணும் இனத்திற்கு எதிராக குறிப்பிட்டுள்ள செலவினத்திற்கு 2025–2026ம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய தலைப்பில் சேர்ப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மாமன்றம் அனுமதிக்கலாம் (பி1/6122/2025)

**தீர்மான எண்.2893** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**16.**நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.DMAWS/219/2025-A2 நாள்.29.10.2025 மற்றும் 34238/2017/அ2 நாள்.11.01.2026 –ஆகிய கடிதங்களின் படி மாநகராட்சிகள் / நகராட்சிகளில் நிலுவையில் உள்ள வருமானவரி நிலுவைத் தொகைகளை முழுவதும் சரி செய்து அறிக்கை சமர்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இம்மாநகராட்சியில் வருமானவரி தலைப்பில் நிலுவையில் உள்ள கேட்பு தொகை ரூ.207390/–ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்துவதற்கும்,இச்செலவினத்தை நிர்வாக நலன் கருதி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குறிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் அனுமதிக்காக (சி5/3600/2019)

**தீர்மான எண்.2894** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**17.** கரூர் மாநகராட்சி மண்டலம் –2 வார்டு எண்.20–27 மற்றும் வார்டு எண்.29–35 பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஆழ்குழாய் கிணறு அமைத்து அதன் மூலம் மினிபவர் பம்ப் பொருத்தி 169 எண்ணிக்கை பயன்பாட்டில் உள்ளது. மேற்படி மினிபவர் பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்கண்ட மின்பவர் பம்புகளை பராமரிப்பு செய்யும் பணிக்கு முதன்முறையாக 12.12.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.40.00 லட்சம்**

1. M/S.A S Power Solution, Trichy ,மதிப்பீட்டைவிட **0.23**%சதம் குறைவு
2. M/s.ASV Constructions, Trichy மதிப்பீட்டைவிட 3.89%சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.A S Power Solution, Trichy ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **( இ2/7140/2025)**

**தீர்மான எண்.2895** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**18.** கரூர் மாநகராட்சி மண்டலம் **–1** வார்டு எண்.**1** – **11** மற்றும் **28** வரையுள்ள பகுதிகளுக்கு வாங்கல் மற்றும் மேலமாயனூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு வாங்கப்பாளையம் மற்றும் குளத்துப்பாளையம் நீருந்து நிலையம் (Booster station) மூலமாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு மண்டலம் **–1**ல் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

வாங்கல் மற்றும் மேலமாயனூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு வாங்கப்பாளையம் மற்றும் குளத்துப்பாளையம் நீருந்து நிலையங்களில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.க.எண்.21787/2021/EA2, நாள்.**02.10.2021**ல் தெரிவித்துள்ளதற்கிணங்க மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் குடிநீர் நீரேற்றும் நிலையம் மற்றும் தொடர்புடைய கட்டமைப்பு பணிகளை இயக்கி பராமரித்தல் பணிக்கான அளவுகோல் மற்றும் பொது வழி முறைகளின்படி ஜனவரி **1 /26** முதல் ஜீன் **30/2026** வரை **181** நாட்களுக்கு வெளிக்கொணர்வு முகமை(Out sourcing) மூலம் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக **12.12.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.44.00 லட்சம்**

1. M/S.A S Power Solution, Trichy ,மதிப்பீட்டைவிட **0.06**%சதம் குறைவு
2. M/s.ASV Constructions, Trichy மதிப்பீட்டைவிட 14.69%சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

**1.**மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.A S Power Solution, Trichy ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

**2.**மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**3.**மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/7388/2025)**

**தீர்மான எண்.2896** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**19.** கரூர் மாநகராட்சி மண்டலம் **–3** வார்டு எண்.**12** – **19** மற்றும் **38–42** வரையுள்ள பகுதிகளுக்கு கட்டளை பழைய தாந்தோணி மற்றும் கட்டளை சணப்பிரட்டி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு மூலக்காட்டானூர் நீருந்து நிலையம் (Booster station) மூலமாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு மண்டலம் **–3**ல் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

கட்டளை பழைய தாந்தோணி மற்றும் கட்டளை சணப்பிரட்டி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு மூலக்காட்டானூர் நீருந்து நிலையங்களில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.**21787/2021/EA2**, நாள்.**02.10.2021**ல் தெரிவித்துள்ளதற்கிணங்க மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் குடிநீர் நீரேற்றும் நிலையம் மற்றும் தொடர்புடைய கட்டமைப்பு பணிகளை இயக்கி பராமரித்தல் பணிக்கான அளவுகோல் மற்றும் பொது வழி முறைகளின்படி ஜனவரி **1 /26** முதல் ஜீன் **30/2026** வரை **181** நாட்களுக்கு வெளிக்கொணர்வு முகமை (Out sourcing) மூலம் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக **12.12.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.33.00 லட்சம்**

1. M/S.A S Power Solution, Trichy ,மதிப்பீட்டைவிட **0.05**%சதம் குறைவு
2. M/s.ASV Constructions, Trichy மதிப்பீட்டைவிட 14.69%சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

**1.**மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.A S Power Solution, Trichy ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

**2.**மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**3.**மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/7386/2025)**

**தீர்மான எண்.2897** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**20.** கரூர் மாநகராட்சி மண்டலம் **–2** வார்டு எண்.**20** – **27** மற்றும் **29–35** வரையுள்ள பகுதிகளுக்கு நெரூர் கிணறு **–1** மற்றும் **2** மூலம் நெரூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு பாலம்மாள்புரம் நீருந்து நிலையம் (Booster station) மூலமாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு மண்டலம் **–2**ல் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நெரூர் கிணறு **–1** மற்றும் **2** மூலம் நெரூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு பாலம்மாள்புரம் நீருந்து நிலையங்களில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.க.எண்.**21787/2021/EA2**, நாள்.**02.10.2021**ல் தெரிவித்துள்ளதற்கிணங்க மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் குடிநீர் நீரேற்றும் நிலையம் மற்றும் தொடர்புடைய கட்டமைப்பு பணிகளை இயக்கி பராமரித்தல் பணிக்கான அளவுகோல் மற்றும் பொது வழி முறைகளின்படி ஜனவரி **1 /26** முதல் ஜீன் **30/2026** வரை **181** நாட்களுக்கு வெளிக்கொணர்வு முகமை (Out sourcing) மூலம் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக **12.12.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.40.60 லட்சம்**

1. M/S.A S Power Solution, Trichy ,மதிப்பீட்டைவிட **0.06**%சதம் குறைவு

2. M/s.ASV Constructions, Trichy மதிப்பீட்டைவிட 14.93%சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

1.மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.A S Power Solution, Trichy ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

2.மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3.மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/7387/2025)**

**தீர்மான எண்.2898** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

21. கரூர் மாநகராட்சி மண்டலம் –4 வார்டு எண்.36,37 மற்றும் 43–48 வரையுள்ள பகுதிகளுக்கு கட்டளை KFW திட்டம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு பொன்நகர் நீருந்து நிலையம் (Booster station) மூலமாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு மண்டலம் –4ல் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

கட்டளை KFW திட்டம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு பொன்நகர் நீருந்து நிலையங்களில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021ல் தெரிவித்துள்ளதற்கிணங்க மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் குடிநீர் நீரேற்றும் நிலையம் மற்றும் தொடர்புடைய கட்டமைப்பு பணிகளை இயக்கி பராமரித்தல் பணிக்கான அளவுகோல் மற்றும் பொது வழி முறைகளின்படி ஜனவரி 1 /26 முதல் டிசம்பர் 31/2026 வரை 365 நாட்களுக்கு வெளிக்கொணர்வு முகமை(Out sourcing) மூலம் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக 12.12.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.44.25 லட்சம்**

1. M/S.A S Power Solution, Trichy ,மதிப்பீட்டைவிட 0.05%சதம் குறைவு
2. M/s.ASV Constructions, Trichy மதிப்பீட்டைவிட 12.20%சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

1.மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.A S Power Solution, Trichy ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

2.மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்

3.மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/7385/2025)**

**தீர்மான எண்.2899** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

22. கரூர் மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்.36,37 மற்றும் 43 முதல் 48 வரையுள்ள பகுதிகளுக்கு கட்டளை பகுதிகளிலுள்ள (KFW புதிய குடிநீர் திட்டம்) தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு பொன் நகர் குடிநீர் நீரேற்று நிலையம் (Booster station) மூலமாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு, மண்டலத்தில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

| வ.எண் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி விபரம் | கொள்ளளவு |
|---|---|---|
| 1 | கோடங்கி பட்டி | 0.60 லட்சம் லிட்டர் |

| | | |
|---|---|---|
| 2 | தாந்தோணி மேற்கு | 2.00 லட்சம் லிட்டர் |
| 3 | தாந்தோணி கிழக்கு | 1.00 லட்சம் லிட்டர் |
| 4 | இராயனூர் ஆர்.கே.ஜீ நகர் | 1.00 லட்சம் லிட்டர் |
| 5 | பொன்நகர் | 9.00 லட்சம் லிட்டர் |
| 6 | செல்லாண்டிபாளையம் (புதியது) | 3.60 லட்சம் லிட்டர் |
| 7 | செல்லாண்டிபாளையம் (பழையது) | 1.50 லட்சம் லிட்டர் |
| 8 | தோரணக்கல்பட்டி | 3.60 லட்சம் லிட்டர் |
| 9 | காளியப்பனூர் | 1.50 லட்சம் லிட்டர் |
| 10 | மாவட்ட ஆட்சியர் வளாகம் பின்புறம் | 4.10 லட்சம் லிட்டர் |
| 11 | திருமாநிலையூர் | 2.00 லட்சம் லிட்டர் |

மேற்படி **11** மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலிருந்து வால்வுகளை இயக்குதல் மற்றும் குடிநீர் விநியோக பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021ல் தெரிவித்துள்ளதற்கிணங்க மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் குடிநீர் நீரேற்றும் நிலையம் மற்றும் தொடர்புடைய கட்டமைப்பு பணிகளை இயக்கி பராமரித்தல் பணிக்கான அளவுகோல் மற்றும் பொது வழி முறைகளின்படி ஜனவரி **1 /26** முதல் ஜீன் **30/2026** வரை **181** நாட்களுக்கு வெளிக்கொணர்வு முகமை(Out sourcing) மூலம் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக **12.12.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.29.40 லட்சம்**

1. M/S.Vishwa Infrastructure, Kanniyakumari ,மதிப்பீட்டைவிட 0.05%சதம் குறைவு
2. M/s.ASV Constructions, Trichy மதிப்பீட்டைவிட 11.72 %சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

**1**மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.Vishwa Infrastructure, Kanniyakumari ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

**2.**மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**3.**மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/7383/2025)**

**தீர்மான எண்.2900** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**23.** கரூர் மாநகராட்சி மண்டலம் **–2** வார்டு எண்.**20 – 27** மற்றும் **29–35** வரையுள்ள பகுதிகளுக்கு நெரூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு பாலம்மாள்புரம் பகுதியிலுள்ள குடிநீர் நீரேற்று நிலையம் (Booster station) மூலமாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு, மண்டலத்தில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

| வ.எண் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி விபரம் | கொள்ளளவு |
|---|---|---|
| 1 | மாவடியான் கோவில் டேங்க் | 4.00லட்சம் லிட்டர் |
| 2 | சிதம்பரம் ஹாஸ்டல் கிழக்கு | 12.00லட்சம் லிட்டர் |
| 3 | சிதம்பரம் ஹாஸ்டல் மேற்கு | 12.00லட்சம் லிட்டர் |
| 4 | ராமானுஜம் நகர் டேங்க் | 3.90 லட்சம் லிட்டர் |
| 5 | டான்சி டேங்க் | 6.00 லட்சம் லிட்டர் |
| 6 | அண்ணா நகர் டேங்க் | 12.00 லட்சம் லிட்டர் |
| 7 | செங்குந்தபுரம் டேங்க் | 4.00 லட்சம் லிட்டர் |
| 8 | ஜவஹர் பஜார் கிழக்கு | 6.00 லட்சம் லிட்டர் |

| | | |
|---|---|---|
| 9 | ஜவஹர் பஜார் மேற்கு | 12.00 லட்சம் லிட்டர் |

மேற்படி 9 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலிருந்து வால்வுகளை இயக்குதல் மற்றும் குடிநீர் விநியோக பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021ல் தெரிவித்துள்ளதற்கிணங்க மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் குடிநீர் நீரேற்றும் நிலையம் மற்றும் தொடர்புடைய கட்டமைப்பு பணிகளை இயக்கி பராமரித்தல் பணிக்கான அளவுகோல் மற்றும் பொது வழி முறைகளின்படி ஜனவரி 1 /26 முதல் ஜீன் 30/2026 வரை 181 நாட்களுக்கு வெளிக்கொணர்வு முகமை(Out sourcing) மூலம் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக 12.12.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.41.00 லட்சம்</u>

1. M/S.Vishwa Infrastructure, Kanniyakumari ,மதிப்பீட்டைவிட 0.06%சதம் குறைவு
2. M/s.ASV Constructions, Trichy மதிப்பீட்டைவிட 11.72 %சதம் அதிகம்

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1.மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.Vishwa Infrastructure, Kanniyakumari ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

2.மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/7384/2025)**

**தீர்மான எண்.2901** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

24. கரூர் மாநகராட்சி மண்டலம் –1 வார்டு எண்.1 முதல் 11 வரை மற்றும் வார்டு 28 வரையுள்ள பகுதிகளுக்கு வாங்கல் தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு வாங்கப்பாளையம் பகுதியிலுள்ள குடிநீர் நீரேற்று நிலையம் (Booster station) மூலமாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு, மண்டலத்தில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

| வ.எண் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி விபரம் | கொள்ளளவு |
|---|---|---|
| 1 | வி.வி.ஜீ நகர் | 4.60லட்சம் லிட்டர் |
| 2 | கோதுார் | 2.50லட்சம் லிட்டர் |
| 3 | இந்திரா நகர் | 2.90லட்சம் லிட்டர் |
| 4 | வடிவேல் நகர் | 2.00லட்சம் லிட்டர் |
| 5 | வெங்கமேடு | 4.00 லட்சம் லிட்டர் |
| 6 | வாங்கப்பாளையம் | 14.00 லட்சம் லிட்டர் |
| 7 | கே.வி.பி நகர் | 7.80 லட்சம் லிட்டர் |
| 8 | வ.உ.சி டேங்க் | 6.00 லட்சம் லிட்டர் |

மேற்படி 8 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலிருந்து வால்வுகளை இயக்குதல் மற்றும் குடிநீர் விநியோக பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021ல் தெரிவித்துள்ளதற்கிணங்க மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் குடிநீர் நீரேற்றும் நிலையம் மற்றும் தொடர்புடைய கட்டமைப்பு பணிகளை இயக்கி பராமரித்தல் பணிக்கான அளவுகோல் மற்றும் பொது வழி முறைகளின்படி ஜனவரி 1 /26 முதல் ஜீன் 30/2026 வரை 181 நாட்களுக்கு வெளிக்கொணர்வு முகமை(Out sourcing) மூலம் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக 12.12.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.31.10 லட்சம்</u>

1. M/S.Vishwa Infrastructure, Kanniyakumari ,மதிப்பீட்டைவிட 0.05%சதம் குறைவு
2. M/s.ASV Constructions, Trichy மதிப்பீட்டைவிட 11.72 %சதம் அதிகம்

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1.மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.Vishwa Infrastructure, Kanniyakumari ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2.மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3.மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/7382/2025)**

**தீர்மான எண்.2902** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

25. கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2021 முதல் 2025 வரை மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகள் குறித்த அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் தொழில் மலர் மூலம் விளம்பரம் செய்ததற்கான விளம்பரக் கட்டணம் ரூ.15,750/—ஐ KAL PUBLICATIONS (P) LTD (தொழில் மலர்) நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/8066/2025)**

**தீர்மான எண்.2903** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

26.நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.9730/2025/SS2 நாள்.19.01.2026ல் கரூர் மாநகராட்சி மண்டலம் —4ல் உள்ள கீழ்கண்ட மூன்று தொடக்கப்பள்ளிகளில் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.49.50 இலட்சத்திற்கு SFC—பள்ளி மேம்பாட்டு மானியம் 2025—2026ம் ஆண்டின்கீழ் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S.No | Name of the work | Estimate amount (Rs.in lakhs) | Amount approved in SIG – O&M 2025-26 | ULB Share |
|---|---|---|---|---|
| 1 | Maintenance work and rejunuvation of compound wall to Kodangipatty Panchayat Union Elementary School in ward no.47 at Karur Coporation | 17.50 | 11.16 | 6.34 |
| 2 | Maintenance work and rejunuvation of compound wall to Panduthakaranputhur Panchayat Union Elementary School in ward no.47 at Karur Coporation | 16.00 | 11.00 | 5.00 |
| 3 | Maintenance work and rejunuvation of compound wall to Vengakkalpatty Panchayat Union Elementary School in ward no.48 at Karur Coporation | 16.00 | 11.00 | 5.00 |
| **Total** | | **49.50** | **33.16** | **16.34** |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2.மேற்படி பணிக்காக மாநகராட்சி பங்களிப்பு தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.**16.34** இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/258/2026)**

**தீர்மான எண்.2904** பதிவு செய்யப்பட்டது

**27.** உச்சநீதிமன்ற வழக்கின் உத்திரவு WP-5/2025, நாள்.**07.11.2025,** மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**20383/2022/எச்2,** நாள்.**09.08.2025**ல் அறிவுறுத்தியவாறு இம்மாநகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் **9027** எண்ணிக்கையிலான சமுதாய நாய்களுக்கு அரசின் நிரந்தர வழிகாட்டு நெறிமுறைகளின் படி கருத்தடை பணிகள் மேற்கொண்டு தடுப்பூசி வழங்கும் பணிக்கு விலங்குகள் நல வாரிய அங்கீகாரம் பெற்ற நிறுவனமான International Trust of Peace, Chennai என்ற நிறுவனம் அளித் சம்மத கடிதத்தின் அடிப்படையில் விலங்குகள் நல வாரியம் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையான நாய் ஒன்றுக்கு ரூ.**1650/–** என்ற விகிதத்தில் முதல் கட்டமாக **3000** எண்ணிக்கையிலான சமுதாய நாய்களுக்கு கருத்தடை பணிகள் மேற்கொண்டு தடுப்பூசி வழங்கவும் அதற்கு உண்டான தோராய செலவினம் ரூ.**49.50** இலட்சம் செலவினம் மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

**1.**மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**49.50** இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(எச்1/5956/2006)**

**தீர்மான எண்.2905** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**28.** கரூர் மாநகராட்சி **2025 2026** ஆம் ஆண்டிற்கான கீழ்கண்டுள்ள தலைப்புகளில் ஆண்டு கணக்குகள் முடித்து தணிக்கைக்கு சமர்பிக்க வேண்டியுள்ளது.

1) வருவாய் மற்றும் மூலதன நிதி
2) குடிநீர் மற்றும் வடிகால் நிதி
3) கல்வி நிதி

இம்மாநகராட்சியில் கணக்கு அலுவலர் பணியிடம் நிரப்பப்படாமல் காலியாக உள்ளதால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதி **2023** அத்தியாயம் **6** தொகுதி **2** வ.எண் **263** இன்படி வெளிக்கொணர்வு கணக்காளர் மூலம் **2025 2026** ஆம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள் முடித்து தணிக்கைக்கு சமர்பிக்க உத்தேசமாக ரூ**3,00,000/** செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்

2. மேற்படி **2025 2026** ஆம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள் முடித்து தணிக்கைக்கு சமர்பிக்க ஆகும் செலவினத்தொகையினை இம்மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(பி1/259/2025)**

**தீர்மான எண்.2906** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**29.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் **1** முதல் **4** வரை உள்ள **48** வார்டு பகுதிகளில் **31** அரசு பள்ளிகள் மற்றும் **11** அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆக மொத்தம் **42** பள்ளிகளில் பயிலும், மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மூலமாக நாள்தோறும் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவைப் பெற்று உரிய நேரத்தில் பரிமாறி CMBFS – Mobile –App ல் உணவை பெறுதல், உணவை பரிமாறுதல் மற்றும் உணவின் தரம் ஆகிய அனைத்து பதிவுகளையும் பதிவில் Food servicing Staff பணியாளர்களுக்கு பள்ளி தலைமையாசிரியரின் சான்று பெற்று மாதந்தோறும் நிலையான கட்டணம் (Fixed Payment) ரூ.**1500/–** வழங்க மாநகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**17404/2022/M1,** நாள்.**02.11.2022**ல் தெரிவிக்கப்பட்டதின் பேரில், மேற்படி திட்டத்தில் **31**

அரசு பள்ளியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஏப்ரல் **2025** முதல் மார்ச் **2026** வரையிலான **11** மாதத்திற்கு நிலையான கட்டணம் (Fixed Payment) வழங்க உத்தேச செலவினம் ரூ.**6.80** இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண்**2227** நாள்.**28.02.2025** மற்றும் **11** அரசு உதவி பெறும் பள்ளியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஆகஸ்டு **2025** முதல் ஏப்ரல் **2026** வரை **9** மாதத்திற்கு நிலையான கட்டணம் (Fixed Payment) வழங்க உத்தேச செலவினம் ரூ.**2,02,500** இலட்சத்திற்கும் மாமன்ற தீர்மான எண்**2625**, நாள்.**06.08.2025** ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட திட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் பணிபுரியும் **57** பணியாளர்களுக்கு ஏப்ரல் **2026** முதல் மார்ச் **2027** வரையிலான **12** மாதங்களுக்கு நிலையான கட்டணம் (Fixed Payment) வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. **10,26,000** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**1.**மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**2.**மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து (CMBFS) மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/ 9274/2023)**

**தீர்மான எண்.2907** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**30.** முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மூலமாக கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் 4 வரை உள்ள 48 வார்டு பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ /மாணவியர்களுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களில் காலை உணவுகள் வழங்கும் பணிகளுக்கு ரூ.112.11 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைந்த ஒப்பந்ததப்புள்ளி அளித்துள்ள M/s. No food waste, கோயம்புத்தூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அவசர கூட்ட தீர்மானம் எண்.1585, நாள்.31.10.2023ல் ஒப்புதல் பெறப்பட்டு 24.05.2023ம் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டு தற்போது பணியின் ஒப்பந்தநாள் மே 2026 உடன் முடிவடைய உள்ளதால் மேலும் ஜீன் 2026 முதல் ஆகஸ்டு 2026 வரை இப்பணிக்காக அளிக்கப்பட்ட ஒப்பந்தவிலை விகிதத்தின் படி (ஒருதட்டிற்கு ரூ.12.34) காலை உணவுகள் செய்து தருகிறோம் என்று M/s.No food waste, கோயம்புத்தூர் அவர்களின் கடித நாள்.19.01.2026 மூலம் விருப்ப கடிதம் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் 4 வரை உள்ள 48 வார்டு பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவ /மாணவியர்களுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களில் காலை உணவுகள் வழங்கும் பணியினை ஜீன் 2026 முதல் ஆகஸ்டு 2026 வரை M/s.No food waste, கோயம்புத்தூர் அவர்களின் மூலம் ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தவிலை விகிதத்தின் படி (ஒரு தட்டிற்கு ரூ.12.34) பணியினை மேற்கொள்வதற்கு கால நீடிப்பு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1 /9274 /2023)**

**தீர்மான எண்.2908** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**31.** கரூர் மாநகராட்சிகுட்பட்ட வாங்கல் சாலையில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கடந்த **28.11.2025** ம் தேதியன்று தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியத்தின் மூலம் Analytical charges for physical parameter ரூ.11,750/-Biological parameter charges ரூ.6350/- ஆக மொத்தம் ரூ.18,100/- செலுத்த கடிதம்(ந.க.எண்:**1695**/DEE/TNPCB/KRR/AIR SURVEY/F.NO.0462/2025 நாள்.**04.12.2025**) வரப்பெற்றுள்ளது.

எனவே மேற்கண்ட கடிதத்தின் மீது மேல்நடவடிக்கை தொடர இம்மாநகராட்சிகுட்பட்ட **1–** மண்டலத்தின் உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பு பெறப்பட்டது. இக்குறிப்பில் Analytical charges for physical parameter ரூ.11,750/-Biological parameter charges ரூ.6350/- ஆக மொத்தம் ரூ.18,100/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையை மாவட்ட சுற்றுச்சூழல்

பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியம் கரூர், அவர்களுக்கு வழங்க இம்மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

**1.**மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்கண்ட பணிக்கு தொகை ரூ.**18,100/–** யை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியம் கரூர், அவர்களுக்கு குடிநீர் மற்றும் புதைவடிகால் நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். **(4671/2012/இ5)**

**தீர்மான எண்.2909** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**32.** கரூர் மாநகராட்சிகுட்பட்ட வாங்கல் சாலையில் அமைந்துள்ள குப்பை கிடங்கில் கடந்த **28.11.2025** ம் தேதியன்று தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியத்தின் மூலம் Ambient Air Quality Ambient மற்றும் Noice Level Survey ஆகிய பரிசோதனைகளை மேற்கொண்டமைக்கு கட்டணத்தொகை ரூ.**51,560** செலுத்த கடிதம் (ந.க.எண்:TNSCB/DEL/DGL/AIRSURVEY/F.NO.120/2025-2026 நாள்.**11.12.2025)** வரப்பெற்றுள்ளது.

எனவே மேற்கண்ட கடிதத்தின் மீது மேல்நடவடிக்கை தொடர இம்மாநகராட்சிகுட்பட்ட **1–** மண்டலத்தின் உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பு பெறப்பட்டது. இக்குறிப்பில் Ambient Air Quality Ambient மற்றும் Noice Level Survey ஆகிய பரிசோதனைகளை மேற்கொண்டமைக்கு கட்டணத்தொகை ரூ.**51,560** செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையை துணை தலைமை அறிவியல் அதிகாரி, தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியம் திண்டுக்கல் அவர்களுக்கு வழங்க இம்மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**1.**மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்கண்ட பணிக்கு தொகை ரூ.**51,560/–** யை துணை தலைமை அறிவியல் அதிகாரி, தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியம் திண்டுக்கல் அவர்களுக்கு வருவாய் நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். **(8227/2025/இ5)**

**தீர்மான எண்.2910** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**33.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி பகுதிகளில் புதியதாக புதைவடிகால் திட்டம் செயல்படுத்துவதற்கும் மற்றும் இனாம் கரூர் மற்றும் கரூர் பகுதிகளில் விடுபட்ட பகுதிகளில் புதை வடிகால் திட்டம் செயல்படுத்துவதற்கான திட்டப் பணிகள் குறித்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் அறியும் வண்ணம் The Indian Express மற்றும் The Daily Thanthi நாளிதழில் விளம்பரம் செய்ததற்கான விளம்பரக் கட்டணம் ரூ.**9,66,892/–**ஐ Ravi Publicity Service நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

**1.** மாமன்றம் அனுமதிக்கலாம்

**2.**மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ5/6052/2025)**

**தீர்மான எண்.2911** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**34.** அரசாணை எண்.**1** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை நாள்.**02.01.2026**ன் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.DMA/**30722/2025**A&EAP**2**.நாள்.**24.12.2025**ல் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி பகுதிகளில் புதியதாக புதைவடிகால் திட்டம் செயல்படுத்துவதற்கும் மற்றும் இனாம் கரூர், கரூர் பகுதிகளில் விடுபட்ட பகுதிகளில் புதை வடிகால் திட்டம் செயல்படுத்துவதற்கு **4**வது PSC கூட்டத்தின்படி KFW உதவியுடன் SMIF-TN-III-ன்கீழ் கீழ்கண்டவாறு ரூ.**485.38** கோடி மதிப்பீட்டிற்கு நிதி பங்களிப்பு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதனை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S.No | Details | Amount (Rs.in crore) | Percentage |
|---|---|---|---|
| 1 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) | 85.96 | 17.71% |
| 2 | Loan from TUFIDCO under SUIDF Scheme | 253.80 | 52.29% |
| 3 | Grant from GoI & GoTN under SBM 2.0 | 37.75 | 7.78% |
| 4 | Grant from CGF | 68.88 | 14.19% |
| 5 | ULB Contribution | 38.99 | 8.03% |
| 6 | Total | 485.38 | 100.00% |
| 7 | Operation & Maintenance cost for 5 years for collection system and 10 years for STP. (to be met by the ULB from its General Funds) | 81.86 | |

**அலுவலகக்குறிப்பு:**

**1.** மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**2.**மேற்படி பணிக்காக மாநகராட்சி பங்களிப்பு தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.**38.99** கோடியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**3.**மேற்படி இயக்கலும் காத்தலும் பணிக்கு மாநகராட்சி பங்களிப்பு தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.**81.86** கோடியினை மாநகராட்சி புதைவடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ5/6052/2025)**

**தீர்மான எண்.2912** பதிவு செய்யப்பட்டது

**35.**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி கிராமம் புல எண்கள். **1481, 1482, 1483, 1484** ஆகியவற்றில் உள்ள **27.49** ஏக்கரில் மருத்துவக்கல்லூரி அமைக்க தலைவர் மற்றும் தனி அலுவலர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, கரூர் அவர்களின் கடித ந.க.எண்.04/P&D/2016, நாள்.**15.12.2016**ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டதினை தொடர்ந்து அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து அரசாணை எண்.**97** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள்.**14.09.2017**ன் படி **17.45** ஏக்கர் முன்நுழைவு அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் அரசாணை எண்.**19** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**07.02.2019**ல் **10.04** ஏக்கர் கூடுதலாக முன்நுழைவு அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளதினை தொடர்ந்து நில நிர்வாக ஆணையர் அவர்கள், அரசு கூடுதல் தலைமை செயலாளர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, சென்னை, அவர்களுக்கு முகவரியிட்ட கடித எண்.வி2/**23569/2019** நாள்.**03.10.2020**, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**6442/2016**/டிபி3, நாள்.**25.07.2022** மற்றும் **09.06.2023**ல் கண்டுள்ள கடிதங்களுக்கிணங்க கரூர் மாநகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி கிராமம் புல எண்கள். **1481, 1482, 1483, 1484** ஆகியவற்றில் உள்ள **27.49** ஏக்கர் நிலத்திற்கு கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட நில மதிப்பான ரூ.**40,11,50,574** மற்றும் மேற்படி நிலத்திலுள்ள பூங்கா மேம்பாட்டிற்காக கரூர் மாநகராட்சியால் ஏற்கனவே செலவிடப்பட்ட தொகையான ரூ.**90.00** இலட்சம் உட்பட மொத்தம் ரூ.**41,01,50,574/-**னை கரூர் மாநகராட்சிக்கு வழங்குவது தொடர்பாக நில நிர்வாக ஆணையரின் கருத்துரு அடங்கிய கடித நகலுடன் விபரங்கள் சமர்ப்பிக்கப்படுள்ளதினை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தில் கரூர் அரசு மருத்துவ கல்லூரி கட்ட ஏற்கனவே முதல் கட்டமாக வழங்கியுள்ள **17.45** ஏக்கர் நிலம் போக மீதமுள்ள பூங்கா ஒதுக்கீடு இடம் **10.04** ஏக்கரையும் கூடுதலாக சேர்த்து மொத்தம் **27.49** ஏக்கர் நிலத்தினை வழங்குவது தொடர்பாக, நகராட்சியின் பிற்கால பொதுப்பயன்பாட்டு நில தேவைகள், இந்நிலத்தின் மதிப்பு மற்றும் அரசாணை (நிலை) எண்.**730**, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சிதுறை, நாள்.**14.04.1976** ஆகியவற்றை கருத்தில் கொண்டு நகராட்சிக்கு நிலம், அதில் உருவாக்கப்பட்டுள்ள நகராட்சி சொத்துக்கள் மற்றும் நிதி இழப்பு ஏதுமின்றி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.**35**, நாள்.**17.02.1997** பத்தி எண்.**3**(அ)-ன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான

பட்டா நிலமாக இருக்குமேயானால் (Private lands belonging to Municipal Councils and Municipal Corporation Council) அது எந்த அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனத்திற்குத் தேவையானாலும், அதனை அப்போதைய சந்தை மதிப்பு (Market Value at the rate) அடிப்படையில்தான் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் மற்றும் இவ்விடத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி திட்டம் 2011–2012ன் கீழ் ரூ.500/– இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக பூங்கா அமைத்திட ந.க.எண்.47923/2011/E3, நாள்.01.02.2012ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பூங்கா மேம்பாட்டிற்காக நகராட்சியால் இதுநாள்வரை சொத்தாக்கம் செய்திட செலவிடப்பட்ட தொகை ரூ.90.00 இலட்சம் ஆகியவற்றை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு முன் நுழைவு அனுமதியினை நகராட்சி ஆணையர், கரூர் அவர்கள், முதல்வர் அரசு மருத்துவக் கல்லூரி கரூர் அவர்களுக்கு அளித்திட ஆணையிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து முதற்கட்டமாக 17.45 ஏக்கர் மற்றும் இரண்டாம் கட்டமாக 10.04 ஏக்கர் ஒப்படைக்கப்பட்டு மருத்துவக்கல்லூரி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

மேலும் கரூர் மாநகராட்சிக்கு நில நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட நில மதிப்பு தொகை ரூ.40,11,50,574/– மற்றும் பூங்கா மேம்பாட்டிற்காக செலவிடப்பட்டுள்ள தொகை ரூ.90,00,000/– என மொத்தம் ரூ.41,01,50,574/–யை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையிடமிருந்து பெற்றுத்தருமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு தொடர்ந்து நினைவூட்டு கடிதங்கள் இவ்வலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளதின் பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களுக்கு மேற்படி தொகையினை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையிடமிருந்து பெற்றுத்தரகோரி பரிந்துரை செய்யப்பட்டுள்ளதினை தொடர்ந்து அரசாணை (நிலை) எண்.575 மருத்துவம் மக்கள் நல்வாழ்வு (இ2) துறை, நாள்.29.12.2025ல் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி கிராமத்தில் அரசு மருத்துவக்கல்லூரி கட்டுவதற்காக வழங்கப்பட்ட 27.49 ஏக்கர் நிலத்திற்கு நிலமதிப்பு ரூ.40,11,50,574/–னை கரூர் மாநகராட்சிக்கு செலுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டு வரப்பெற்ற அரசாணையினை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் **(எப்1/2433/2016)**

**தீர்மான எண்.2913** பதிவு செய்யப்பட்டது

**36.**கரூர் மாநகராட்சி இனாம் கரூர் கிராம புல எண்.135 முதல் 138 வரை 140, 141, 146, 151 முதல் 155 வரை 160ல் உள்ள 98.43 ஏக்கர் பரப்பளவிலுள்ள மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடு இடம் தொடர்பாக கொங்கு நகர் குடியிருப்போர் நலச்சங்கத்தால் தொடரப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மற்றும் Cont.P(MD)No.1487/2019 in W.P.(MD)No.2895/2011ன் தீர்ப்பு நாள்.26.06.2023ன் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கொங்கு நகர் மனைப்பிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது உபயோக இடங்களில் கீழ்கண்ட 6 இடங்கள், கட்டுமானங்கள் ஏதும் இல்லாமல் காலியாக உள்ளதால் கம்பிவேலி அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

| வ.எண் | பொதுஉபயோக இடத்தின் விபரம் | இனாம் கரூர் கிராமம் புல எண் |
|---|---|---|
| 1 | துவக்கப்பள்ளி –1 | 141 பகுதி |
| 2 | விளையாடுமிடம் | 136/4 பகுதி |
| 3 | பொது உபயோகம் | 135/2 பகுதி |
| 4 | மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி – 1 | 137/2 பகுதி |
| 5 | மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி – 2 | 140 பகுதி |
| 6 | பொது உபயோகம் | 160 பகுதி |

எனவே, மேற்கண்ட 6 காலி இடங்களை சுற்றி கம்பிவேலி அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்

3.மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **( இ1/158/2026)**

**தீர்மான எண்.2914** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

37.கரூர் மாநகராட்சி மண்டலம்–1, 2, 3 மற்றும் 4க்குட்பட்ட நீரேந்து நிலையத்தில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் கேஸ் குளோரினேசன் சிலிண்டர் மற்றும் உதிரி பாகங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்து சோதனை செய்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.27.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை மாநகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/4359/2025)**

**தீர்மான எண்.2915** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

38.தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்), கரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.357/2025, நாள்.08.01.2026ல் 2025–2026ம் நிதியாண்டிற்கான மானிய கோரிக்கையின் போது மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு எண்.4ன்படி கட்டுமானத் தொழிலாளர்கள் அவர்களது அன்றாடப்பணி தொடர்பாக அதிக அளவில் காலையில் கூடி காத்திருக்கும் இடங்களில் கட்டுமானத் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் குடிநீர் மற்றும் இதர அடிப்படை வசதிகளுடன் கூடிய 50 வசதி மையங்கள் 20 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பின் 74–வது திருத்தச்சட்டம் 1992 மூலம் சேர்க்கப்பட்ட 12வது அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நகராட்சிகளின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளின் 18 செயல்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல், கலாச்சாரம் கல்வி மற்றும் அழகியல் அம்சங்களை மேம்படுத்துதல் பொது வசதிகள் (தெரு விளக்குகள் வாகன நிறுத்துமிடங்கள், பேருந்து நிறுத்தங்கள், பொது வசதிகள்–ன் கீழ் தீர்மானம் இயற்றி கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வசதி மையம் (Facilitation center (Temporary shed)) அமைக்க கரூர் மாவட்டத்தில் கட்டுமானத் தொழிலாளர்கள் அதிக அளவில் கூடும் இடத்தில் 35'x10'x10' பரப்பளவு நிலத்தை ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே இத்திட்டம் அரசின் முக்கிய திட்டம் என்பதால் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட கரூர் நகரம், நகரளவு வார்டு–3, பிளாக்–5, நகரளவு எண்.223/3ல் உள்ள இடத்தில் (மினி பேருந்து நிலையம் பகுதி) 35'x10'x10' பரப்பளவு நிலத்தில் வசதி மையம் (Facilitation center (Temporary shed)) அமைக்க உரிய நிபந்தனைகளுடன் தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்), கரூர் அவர்களுக்கு கட்டுமானதொழிலாளர்களுக்கு அடிப்படை வசதியுடன் தற்காலிகமாக பொது வசதி மையம் (Temporary shed) அமைத்துக்கொள்ள தடையின்மை சான்று வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு:</u>

மாமன்றம் அனுமதிக்கலாம் **(2164/2025/எப்1)**

**தீர்மான எண்.2916** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**39.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட திருமாநிலையூர் பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி புதிய பேருந்துநிலையம் கட்டப்பட்டு, **06.10.2025** முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் முத்துக்குமாரசாமி பழைய பேருந்து நிலையத்தின் குத்தகை உரிமைதாரர் எவ்வித முன்னறிவிப்புமின்றி முத்துக்குமாரசாமி பழைய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும் நகர பேருந்துகள், மினிபேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம், பொருட்கள் பாதுகாப்பு அறை, எடைமெஷின், தட்டேந்தி பூக்கள் விற்பனை ஆகிய இனங்களை **06.10.2025** முதல் வசூல் செய்யாமல் விட்டுவிட்டனர்.

எனவே முத்துக்குமாரசாமி பழைய பேருந்து நிலையத்தில் **2025–2026**ஆம் ஆண்டுக்கு மூன்றாண்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ள இனங்களான பேருந்து நுழைவு கட்டணம், தட்டேந்தி பூக்கள் விற்பனை ஆகிய இனங்களுக்கு துறைரீதியாக வசூல் செய்து, மாநகராட்சி கணக்கில் வரவு வைக்கவும், மேலும் பேருந்து நிலையம் இயங்காததாலும், பயணிகள் வரத்துகுறைவாக உள்ளதாலும், பொருட்கள் பாதுகாப்புஅறை, எடைமெஷின் ஆகிய குத்தகை உரிமை இனங்களை அலுவலக பணியாளர் தினசரி பணியுடன் கூடுதலாக பணிபார்க்கப்பட்டும் **06.10.2025** முதல் நாளது தேதி வரை பொருட்கள் பாதுகாப்பு அறை மற்றும் எடைமெஷின் ஆகிய இனங்களுக்கு எவ்வித வருவாயும் வராததாலும் அலுவலகப் பணியாளர்களுக்கு கூடுதல் பணிச்சுமை உள்ளதாலும் முத்துக்குமாரசாமி பழைய பேருந்துநிலையத்தில் உள்ள குத்தகை இனங்களான பொருட்கள் பாதுகாப்பு அறை மற்றும் எடைமெஷின் ஆகிய இனங்களை ரத்து செய்யவும் மேலும் பொதுசுகாதாரபிரிவு வார்டு அலுவலமாக பொருள்கள் பாதுகாப்பு அறையினை பயன்படுத்திக்கொள்ள இம்மாநகராட்சியின் சுகாதார அலுவலர் அவர்கள் கோரியுள்ளதின் அடிப்படையில் பொதுசுகாதாரபிரிவிற்க்கு வழங்கவும் மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

**1.**அனுமதிக்கலாம்.

**2.**அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, வசூல் பணி மேற்கொள்வதையும் மாமன்றம் அனுமதிக்கலாம் . **(7763/2020/அ6)**

**தீர்மான எண்.2917** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**40.** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு வாகனங்கள் பராமரிப்பு மற்றும் இயக்குதல் செலவின உயர்வு காரணமாக இயக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் TAMIL NADU DEPARTMENTAL MOTOR VEHICLES DISPOSAL RULES 1990 அரசாணை எண்.2275 நாள்.10.10.1990ன் வழிகாட்டுதலின்படி கீழ்கண்ட வாகனங்கள்

**<u>கரூர் மாநகராட்சி வாகன கழிவு பட்டியல் 2025</u>**

| வ.எண் | வாகன பதிவு எண் | வாகன வகை | தயாரிப்பு நிறுவனம் | தயாரிப்பு ஆண்டு | நிறுத்தி வைக்கப்பட்ட இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | TN 47 U 4468 | OPEN BODY | ASHOK LEYLAND | 2010 | ஜவஹர் பார்க் டேங்க் |
| 2 | TN 47 U 5179 | TANKER | EICHER MOTORS | 2010 | மாநகராட்சி அலுவலகம் |
| 3 | TN 47 F 1521 | OPEN BODY | SWARAJ MAZDA LTD | 1999 | ஜவஹர் பார்க் டேங்க் |
| 4 | TN 47 U 8186 | 3 WHEEL AUTO | PIAGGIO GREVES LTD | 2010 | ஜவஹர் பார்க் டேங்க் |
| 5 | TN 47 U 5436 | 3 WHEEL AUTO | PIAGGIO GREVES LTD | 2010 | ஜவஹர் பார்க் டேங்க் |
| 6 | TN 47 P 4014 | OPEN BODY | ASHOK LEYLAND | 2005 | சிதம்பரம் டேங்க் |
| 7 | TN 47 P 0342 | OPEN BODY | ASHOK LEYLAND | 2005 | வாங்கல் ரோடு உரக்கிடங்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | TN 47 P 0319 | OPEN BODY | ASHOK LEYLAND | 2006 | வாங்கல் ரோடு உரக்கிடங்கு |
| 9 | TN 47 AD 6306 | OPEN BODY | SML ISUZU LTD | 2013 | வாங்கல் ரோடு உரக்கிடங்கு |
| 10 | TN 47 AC 5234 | OPEN BODY | SML ISUZU LTD | 2012 | வாங்கல் ரோடு உரக்கிடங்கு |

கழிவிடை செய்து பொது ஏலம் வைத்து அப்புறப்படுதிடவும் அவ்வாகனங்களுக்கு ஆய்வு கட்டணமாக வாகனம் துறைக்கு ரூ.1000/– வீதம் மொத்தம் பத்தாயிரம் மோட்டார் வாகன பராமரிப்பு துறைக்கு செலுத்திடவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ7/1577/2024)**

**தீர்மான எண்.2918** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**41.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப்பிரிவில் கலவை உரக்கிடங்கு பணிக்கு இயங்கி வரும் HYUNDAI 110 ஹிட்டாச்சி இயந்திரம் 2017ம் ஆண்டு வாங்கப்பட்டு சுமார் 8 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. தற்சமயம் இயந்திரத்தில் முக்கியமான ஜெயின் 2 பிராக்ட் வீல் 2, ஜெயின் ரோலர் 12, டிராவல் மோட்டார் சில், பிளைவில் ரிங்–1 ஆகியவை மிகவும் பழுதடைந்து விட்டதால் இயந்திரத்தை இயக்க சிரமம் ஏற்படுகிறது. மேற்படி பொருட்கள் ஹிட்டாச்சி இயந்திரம் வாங்கிய நாள் முதல் இதுநாள்வரை மாற்றப்படவில்லை. ஆகவே பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பொருட்களை புதியதாக மாற்றவும் இஞ்சின் ஆயில் சர்வீஸ், பக்கெட் பின்புஸ் வெல்டிங் வேலைகள் எலக்டிரிஷன் வேலைகள் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் இயந்திரத்தை வானூர்தியில் ஏற்றி சேலம் பனிமனைக்கு சென்று பழுது நீக்கம் செய்து வருவதற்கு ஹிட்டாச்சி இயந்திரத்தின் தயாரிப்பு நிறுவனமான அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையான HYUNDAI SSSH EQUIPMENTS PRIVATE LTD, SALEM நிறுவனத்திடமிருந்து நேரடியாக மதிப்பீட்டு பட்டியல் பெற்று பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட செலவினத் தொகை ரூ.18.50/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1.மாமன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பணிக்கான செலவினத்தொகை ரூ.18.50/–ஐ நகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்

3.மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்பிற்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினத்தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ7/203/2026)**

**தீர்மான எண்.2919** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**42.**கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான முத்துக்குமாரசாமி பழையபேருந்து நிலையத்தில் மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 01.04.2025 முதல் 31.03.2026 வரையிலான காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டு, குத்தகைதாரர்களால் வசூல் செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் 06.10.2026 ஆம் தேதியன்று திருமாநிலையூர் பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு, 06.10.2025 முதல் செயல்பட்டு வருகிறது. எனவே முத்துக்குமாரசாமி பழைய பேருந்து நிலையத்தில் ஆண்டு குத்தகை இனங்களான பேருந்து நுழைவு கட்டணம் வசூல், பொருட்கள் பாதுகாப்பு அறை, கட்டண கழிப்பறை, எடைமெஷின் மற்றும் தட்டேந்தி பூக்கள் விற்பனை ஆகிய இனங்களின் குத்தகை உரிமத்தினை 10.10.2026 முதல் ரத்து செய்து செலுத்திய தொகையில் மீதம் உள்ள தொகையினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளனர்.

எனவே அன்னார்களுக்கு ஏலஉரிமத்தில் பயன்படுத்திய காலத்தினை தவிர்த்து மீதமுள்ள காலத்திற்கு தொகையினை கீழ்கண்டவாறு வழங்க மாமன்ற அனுமதி கோரி மாமன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

## பேருந்து நுழைவு கட்டணம்

| நாட்கள் | ஏலத்தொகை | சரக்கு மற்றும் சேவை | வருமானவரி | மொத்தம் | திரும்ப வழங்க வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 365 நாள் | 2205000 | 396900 | 44100 | 2646000 | |
| ஒருநாள் | 6041 | 1087 | 121 | 7249 | |
| பயன்படுத்திய 193 நாட்கள் | 1165932 | 209868 | 23319 | 1399118 | **1246882** |

## பொருட்கள்பாதுகாப்புஅறை

| நாட்கள் | எலதொகை | சரக்கு மற்றும் சேவை | வருவாய் | மொத்தம் | திரும்ப வழங்க வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 365 நாள் | 294000 | 52920 | 5880 | 352800 | |
| ஒருநாள் | 805 | 145 | 16 | 967 | |
| பயன்படுத்திய 193 நாட்கள் | 155458 | 27982 | 3109 | 186549 | **166251** |

## கட்டணகழிப்பறை

| நாட்கள் | எலதொகை | சரக்கு மற்றும்சேவை | வருவாய் | மொத்தம் | திரும்ப வழங்க வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 365 நாள் | 2206050 | 397089 | 44121 | 2647260 | |
| ஒருநாள் | 6044 | 1088 | 121 | 7253 | |
| பயன்படுத்திய 193 நாட்கள் | 1166487 | 209968 | 23330 | 1399784 | **1247476** |

## எடைமெஷின்

| நாட்கள் | எலதொகை | சரக்கு மற்றும்சேவை | வருவாய் | மொத்தம் | திரும்ப வழங்க வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 365 நாள் | 28350 | 5103 | 567 | 34020 | |
| ஒருநாள் | 78 | 14 | 2 | 93 | |
| பயன்படுத்திய 193 நாட்கள் | 14991 | 2698 | 300 | 17989 | **16031** |

## தட்டேந்திபூக்கள்விற்பனை

| நாட்கள் | எலதொகை | சரக்கு | வருவாய் | மொத்தம் | திரும்ப |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | **மற்றும்சேவை** | | | **வழங்க வேண்டிய தொகை** |
| 365 நாள் | 813750 | 146475 | 16275 | 976500 | |
| ஒருநாள் | 2229 | 401 | 45 | 2675 | |
| பயன்படுத்திய **193** நாட்கள் | 430284 | 77451 | 8606 | 516341 | **460159** |

<u>அலுவலக குறிப்பு</u>

மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். **(7763/2020/அ6)**

**தீர்மான எண்.2920** பொருளில் குறிப்பிட்டுள்ள ஏல இனங்களுக்கு பயன்படுத்திய நாட்கள் போக மீதமுள்ள நாட்களான நிலுவை தொகையினை கணக்கு செய்து குத்தகைதாரர்களுக்கு திரும்ப வழங்க இம்மாமன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**43.**மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம் Suo Moto Writ petition No(s) 5 of 2025 (in RE: CITY HOUNDED BY STRAYS, KIDS PAY PRICE and others SLPs) வழக்கின் உத்திரவு நாள்.**07.11.2025**, அரசு செயலர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்(காப3)துறை கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளவாறு கரூர் மாநகராட்சிக்குட்பட்ட **1** முதல் **48** வார்டுகளில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளி மற்றும் கல்வி நிறுவனங்கள், மத்திய மற்றும் மாநில அரசு மருத்துவமனைகள், அலுவலக கட்டடங்கள், நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவ கல்லூரிகள், அரசு மற்றும் தனியார் கல்லூரிகள், பொது விளையாட்டு வளாகங்கள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் இதர பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், வழிபாட்டுதலங்கள் ஆகிய கட்டடங்களில் சுற்றித்திரியும் தெருநாய்களை கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டதில் மொத்தம் **9027** எண்ணிக்கையிலான சமுதாய நாய்கள் கண்டறியப்பட்டது. மேற்படி கண்டறியப்பட்ட சமுதாய நாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்து காப்பகத்தில் அடைத்து பராமரிக்க போதிய இடவசதி இல்லாத காரணத்தால் மாநகராட்சிக்கு சொந்தமான வாங்கல் சாலையில் அரச காலனியில் அமைந்துள்ள சர்வே எண்.**927**ல் **500** நாய்களுக்கு ஒரு காப்பகம் வீதம் காப்பகங்கள் அமைப்பதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம். **(எச்1/279/2026)**

**தீர்மான எண்.2921** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**மேயர்**

**கரூர் மாநகராட்சி**